பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 11 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தொழில் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உத்வேகம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி மகாராஷ்டிராவில் தேர்தல் பிரச்சாரத்தின்போது தெரிவித்துள்ளார்.
2. பிஜேபி கடைபிடித்து வரும் வரிக் கொள்கை பெரும் செல்வந்தர்களை ஊக்குவிப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.
3. தலைநகர் தில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருவதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.
4. காஸா போரில் சர்வதேச மனித உரிமை சட்ட விதிமுறைகள் அதிக அளவில் மீறப்படுவதாக ஐ நா மனித உரிமைகள் ஆணையம் குற்றம்சாட்டியுள்ளது.
5. உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றுள்ளார்.

**[]<<<>>>[]**

தொழில் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உத்வேகம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் விதர்பா பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் உள்ள பருத்தி சாகுபடியாளர்கள் பயன்பெறும் வகையில் அம்ராவதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

மத்தியில் தமது தலைமையிலான அரசு தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற பின், மகாராஷ்டிரா மாநிலத்தில் புதிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் திரு தேவேந்திர பட்னவிஸ் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் பாசன திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வைன்-கங்கா, நல-கங்கா மற்றும் பைன்-கங்கா நதிநீர் இணைப்பு திட்டங்கள் மூலம் அம்மாநிலத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று பிரதமர் தெரிவித்தார்.

மராத்தி மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை மத்திய அரசு வழங்கி இருப்பது மகாராஷ்டிரா மாநிலத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பிஜேபி கடைபிடித்து வரும் வரிக் கொள்கை பெரும் செல்வந்தர்களை ஊக்குவிக்கும் வயையில் உள்ளது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்,

ஜார்க்கண்ட் மாநிலம் ஜன்பாத் மாவட்டத்தில் இன்று தேர்தல் பிரச்சரம் மேற்கொண்ட அவர், ஏழை எளிய மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் அக்கட்சி அக்கறை செலுத்தவில்லை என்று குற்றம்சாட்டினார்.

ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகையில் பெரும் பங்கு வகிப்பதாகவும், ஆனால் அரசு அமைப்புகளில் அவர்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி, காங்கிரஸ், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் 13-ஆம் தேதியும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் 20-ஆம் தேதியும் நடைபெறுகிறது.

மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக வரும் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

நடப்பு கரீப் பருவத்தில் 185 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு ஆண்டுக்கான கொள்முதல் கடந்த மாதம் பஞ்சாப் மாநிலத்தில் தொடங்கப்பட்டு சுமார் மூவாயிரம் மண்டிகளில் கொள்முதல் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டள்ளது.

நடப்பு ஆண்டுக்கான கொள்முதல் இம்மாதம் 30-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்தர நெல்லுக்கு குவிண்டாலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை இரண்டாயிரத்து 320 ரூபாய் வழங்கப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஹஜ் புனித பயண திட்டத்தை எளிமையாக்குவதற்கான பல சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

ஹஜ் பயணத் திட்டத்தை மேற்கொள்வதற்கான மின்னணு கட்டமைப்பு, அதிக அளவில் பெண்களை ஹஜ் யாத்திரைக்கு ஊக்குவிப்பது, குறைந்த வருவாய் பிரிவினரை பயணத் திட்டத்தில் இணைப்பது போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஹஜ் யாத்திரிகர்களை அனுப்புவதற்கான இருதரப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவ வசதியை செய்து தரவும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

80 வயதுக்கு மேற்பட்ட 40 ஆயிரம் பேர் இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

கடுமையான வானிலையை சமாளிக்கும் வகையில் யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகளை மேற்கொள்ளவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

[]<<<>>>[]

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய தொழில்நுட்ப கல்விக்கழகத்தின் பட்டமளிப்ப விழாவில் உரையாற்றிய அவர், அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும், புதிய படைப்புகளை தருவதிலும் இந்தியா முன்னோடியாக திகழ்கிறது என்று கூறினார்.

கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு பெரிய தொழில் நிறுவனங்கள் நிதி உதவி அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் சாலை கட்டமைப்பை மேம்படுத்த நெடுஞ்சாலைத்துறைக்கு 17 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, அருப்புக்கோட்டை, சிவகாசி மற்றும் ராஜபாளையம் பகுதிகளில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகள், சுற்றுவட்டச்சாலைகள் மற்றும் அரசு தலைமை மருத்துவமனைப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் தரமாகவும், உரிய காலத்தில் முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் அதிக அளவில் தரைப்பாலங்கள் உள்ளதாகவும், அவற்றை மேம்பாலங்களாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள்பபட்டுள்ளதகாவும் அவர் கூறினார்.,

மாநில அரசு அறிவித்த அனைத்து நெடுஞ்சாலை திட்டங்களுக்கும் போதிய நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற்று வருவதாகவும் திரு ஏ வ வேலு தெரிவித்தார்.

[]<<<>>>[]

இலங்கையில் தேயிலை ஏலம் கடந்த வாரத்தில் ஆறு மீல்லியன் கிலோவை எட்டியுள்ளது.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு தேயிலை விற்பனையில் மிகப்பெரிய மாற்றம் காணப்பட்டுள்ளது.,

லோ-கிரௌண்ஸ் உயர்தர தேயிலையை அதிக அளவில் வாங்குவதற்கு வர்த்தகர்கள் முன் வந்துள்ளனர்.

இலங்கை பொருளாதாரத்தில் தேயிலை ஏற்றுமதி முக்கிய பங்கு வகிக்கிறது.

அதிக அளவில் வேலைவாய்ப்பையும், கிராமப்புற வளர்ச்சியையும் தேயிலை உற்பத்தித் தொழில் அளித்து வருகிறது.

**[]<<<>>>[]**

காஸா போரில் சர்வதேச மனித உரிமை சட்ட விதிமுறைகள் அதிக அளவில் மீறப்படுவதாக ஐ நா மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த போரில் உயிரிழந்தவர்களில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் திட்டமிட்டு செயல்படுத்தப்படுவதாகவும், இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் ஐ நா மனித உரிமைகள் ஆணையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

தலைநகர் தில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இன்று நண்பகல் தலைநகரில் சராசரி காற்று மாசு-வின் அளவு 353-ஆக பதிவாகியுள்ளது.

தலைநகரின் பல இடங்களில் காற்று மாசு-வின் அளவு 400-க்கும் கூடுதலாக உள்ளது.

தில்லியில் மேலும் மூன்று நாட்களுக்கு இரவு மற்றும் காலை நேரங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் மையம் கொண்டுள்ள வளிமண்டல கீழடுக்கு சுழற்சி அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப்பதியாக உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களில் காவிரி டெல்டா மாவட்டங்களிலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

_கேரளா மற்றும் ஆந்திராவின் ஒரு சில பகுதிகளிலும் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றுள்ளார்.

கத்தார் நாட்டின் தோஹாவில் இன்று பிற்பகல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து வீரர் ராபர்ட் ஹால்-ஐ தோற்கடித்து பட்டடம் வென்றார்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 11-7, 8-11, 11-9, 11-8 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Wong Po Yui Kirstie**–ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் நடப்பாண்டிற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது இந்தியாவின் ஹரிமன் ப்ரீத்சிங்கிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கோல்கீப்பருக்கான விருதுக்கு இந்தியாவின் ஸ்ரீஜேஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டி இன்று புதுதில்லியில் தொடங்கியது.

இந்தியா உட்பட 22 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தெலுகு அணி – புனே அணியையும், பெங்களூரு – கொல்கத்தா அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**